ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1909/42 - 2015 අප්‍රේල් මස 08 වැනි බදාදා - 2015.04.08

*1909/42 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

ச. அ. இல. : சி எஸ்ஏ/7/சி ஓஜ/எம்எஸ்/01

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன

1. திரு. குலதுங்க முதியன்சேலாகே கிஹான் ஹிமான்சு குலதுங்க அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி
2. திரு. சரத் சந்திரசிறி மாயாதுன்னே அவர்கள்
   ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் அதிபதி
3. சனாதிபதி சட்டத்தரணி ஜயாத்துரை ஞானதாசன் அவர்கள்
   ஓய்வுபெற்ற மேலதிக மன்றாடியார் அதிபதி

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2015 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 03 ஆந் திகதிய அதிகாரப்பத்திரத்தின் மூலம் என்னால் விசாரணை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

மேலும், சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளரும் தவிசாளருமாகிய உயர் நீதிமன்ற நீதிபதி சனாதிபதி சட்டத்தரணி மாண்புமிகு வெவகே பிரியசாத் ஜெராட் டெப் அவர்களும் ஆணையாரான உயர் நீதிமன்ற நீதிபதி அனில் குணரத்ன அவர்களும் தமது பதவிகளிலிருந்து கேட்டு விலகியுள்ளார்களாதலாலும் ;

அதனால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்ப வேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளதாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 3 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, மேல் நீதிமன்ற நீதிபதிகளாகிய பிரீதி பத்மன் சூரசேன மற்றும் தேகிரி அமேந்திர மெண்டிஸ் செனவிரத்ன ஆகியோர்களின் விவேகம், திறமை, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டு மேற்போந்த அதிகாரப் பத்திரத்தின் வண்ணம் தாபிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

அத்துடன் சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளராக மேற்சொல்லப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி பிரீதி பத்மன் சூரசேன அவர்களை நியமிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலாஞ்சினையின் கீழ் இரண்டாயிரத்துபதினைந்தாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் நாளாகிய இன்று, கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.